From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.16/2013

Deposition of witness for: PW - 1

Name : வடிவேலன் Father/Husband Name:முருகன்.

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date :26.11.2018

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை:

நான் பொன்னமராவதி தாலுகா வலையபட்டியில் வசிக்கிறேன். கார் ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபொன முருகானந்தம் மற்றும் செல்வராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரியை தெரியும். கடந்த 23.10.10ம் தேதி இரவு சுமார் 11.00 மணியிலிருந்து 11.15 மணிக்குள் டாடா சுமோ காரில் நானும், முருகானந்தம், செல்வராஜ், சாமிக்கண்ணு மற்றும் ராம்குமார் ஆகியோர்கள் மதுரையிலிருந்து பொன்னமராவதி நோக்கி சென்றுகொண்டிருந்தபோது சத்தியபுரம் விலக்கில் மூங்கில் கண்மாய் அருகே சென்றுகொண்டிருந்தபோது திருச்சியிலிருந்து மதுரை நோக்கி வந்த அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் ஆரன் அடிக்காமல், இன்டிகேட்டர் போடாமலும் கவனக்குறைவாக வந்து எங்கள் காரின்மீது மோதியதில் கார் பள்ளத்தில் கவிழந்தது. எங்கள் காரின் பதிவெண். டி.என்.63 எப். 7557 ஆகும். அரசுப்பேருந்தின் பதிவெண். டி.என்.45 என் 2542 ஆகும். விபத்து நடந்ததில் முருகானந்தம் என்பவர் தலையில் காயம்பட்டும், செல்வராஜ் என்பவர் நெஞ்சில் காயம்பட்டும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். எனக்கு வலதுபக்க கண்ணத்தில் காயம் ஏற்பட்டது. சாமிக்கண்ணு என்பவருக்கு இடதுபக்க விளாவில் காயம்பட்டது. ராம்குமார் என்பவருக்கு வலதுபக்க கழுத்து, இடதுபக்க கை விரலிலும் காயம் ஏற்பட்டது. பிறகு 108 ஆம்புலன்சில் சாமிக்கண்ணு மற்றும் ராம்குமார் ஆகியோர்களை மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இறந்துபோன இருவரையும் மற்றொரு ஆம்புலன்சில் ஏற்றி மேலூர்

அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன். பிறகு காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். நான் ஒருநாள் மட்டும் மேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.16/2013

Deposition of witness for: PW - 2

Name : ராம்குமார் Father/Husband Name:சாமிக்கண்ணு.

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date :26.11.2018

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சப்பாணிவயலில் வசிக்கிறேன். ஆசிரியராக வேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன இருவரையும் எனக்கு தெரியும். எதிரியை பார்த்ததில்லை. 23.10.10ம் தேதி இரவு சுமார் 11.15 மணியளவில் மதுரையிலிருந்து டாடா சுமோ காரில் நான், சாமிக்கண்ணு, செல்வராஜ், வடிவேல், முரகானந்தம் ஆகியோருடன் பொன்னமராவதிக்கு சென்றுகொண்டிருந்தோம். காரை முருகானந்தம் ஓட்டி வந்தார். சத்தியபுரம் மூங்கில் கண்மாய் அருகில் சென்றபோது திருச்சியிலிருந்து வந்த அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் ஆரன் அடிக்காமலும், இன்னடிகேட்டர் போடாமலும் ஓட்டிவந்து எங்கள் காரில் மோதியதில் கார் கண்மாய்க்குள் கவிழ்ந்தது. அதில் எனக்கு இடதுகை நடுவிரலிலும், வலதுபக்க கழுத்திலும் காயம் ஏற்பட்டது. காயமானதும் நான் மயக்கமாகிவிட்டேன். மயக்கம் தெளிந்தபோது நான் மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தேன். என்னுடன் வந்த முருகானந்தம், செல்வராஜ் ஆகியோர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். நான் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.16/2013

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : சாமிக்கண்ணு | Father/Husband Name: | முத்தையா |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :26.11.2018 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சப்பாணிவயலில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன இருவரையும் எனக்கு தெரியும். எதிரியை பார்த்ததில்லை. 23.10.10ம் தேதி இரவு சுமார் 11.15 மணியளவில் மதுரையிலிருந்து டாடா சுமோ காரில் நான், செல்வராஜ், வடிவேல், முருகானந்தம், ராம்குமார் ஆகியோருடன் பொன்னமராவதிக்கு சென்றுகொண்டிருந்தோம். காரை முருகானந்தம் ஓட்டி வந்தார். சத்தியபுரம் மூங்கில் கண்மாய் அருகில் சென்றபோது திருச்சியிலிருந்து வந்த அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் ஆரன் அடிக்காமலும், இன்னடிகேட்டர் போடாமலும் ஓட்டிவந்து எங்கள் காரில் மோதியதில் கார் கண்மாய்க்குள் கவிழ்ந்து கண்ணாடி உடைந்துவிட்டது. அதில் எனக்கு இடது விலா எலும்பில் காயம் ஏற்பட்டது. நான் மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தேன். என்னுடன் வந்த முருகானந்தம், செல்வராஜ் ஆகியோர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். நான் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.16/2013

Deposition of witness for: PW - 4

Name : சௌந்திரம் Father/Husband Name:சுந்தரம்.

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date :26.11.2018

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை:

நான் செல்லியம்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். இறந்துபோன முருகானந்தம் எனது மகன். 23.10.10ம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில் போன்மூலம் விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் வந்தது. நான் மேலூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது என் மகன் இறந்திருந்தார். எனது மகன் மதுரையிலிருந்து டாடா சுமோ காரில் வந்துகொண்டிருந்தபோது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். என் மகனின் பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக கையெழுத்து போட்டு பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.16/2013

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : நல்லம்மாள் | Father/Husband Name:பழனியப்பன். | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :26.11.2018 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சிவகங்கை மாவட்டம் அரமேட்டில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன செல்வராஜ் எனது மகன். 23.10.10ம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில் வடிவேல் என்பவர் போன் மூலம் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார். நான் மேலூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது என் மகன் இறந்திருந்தார். எனது மகன் மதுரையிலிருந்து டாடா சுமோ காரில் வந்துகொண்டிருந்தபோது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். என் மகனின் பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக கையெழுத்து போட்டு பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.